நம்பி வாக்களித்த மக்களுக்கு என்.ஆர்.காங்கிரசும், பா.ஜ.க.வும் செய்ததெல்லாம் துரோகம் மட்டும்தான்!

காங்கிரஸ் கட்சிக்கு டெப்பாசிட் கூட கிடைக்கக் கூடாது; புதுச்சேரியைப் பொறுத்தவரை காங்கிரஸ் கட்சி முடிந்துபோன அத்தியாயம்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் காணொலியில் பரப்புரை!



புதுச்சேரி, அக்.4-

புதுவை மாநிலம், தட்டாஞ்சாவடி சட்ட மன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் சேது செல்வம் அவர்களை ஆத ரித்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக மேற் கொண்ட பரப்புரையின் விவரம் வருமாறு:-

அன்பார்ந்த தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதி வாக்காள பெருமக்களுக்கு என் இனிய வணக்கம். உங்களை எல்லாம் இந்த காணொலி வாயிலாகச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாட்டைப் போலவே புதுச்சேரியிலும் மக்களின் நலத் துக்கும் வளத்துக்கும் - பல்லாண்டு காலமா கப் பங்காற்றிய இயக்கம் திராவிட முன் னேற்றக் கழகம் என்பது புதுவை மக்களாகிய உங்களுக்கு நன்றாகவே தெரி யும். 1979ஆம் ஆண்டு புதுச்சேரியின் தனித்தன்மையை காக்க, பாண்டுரங்கன் என்ற கழகத் தோழரையே இழந்து, புது வைக்கு வந்த சோதனையை தடுத்து நிறுத் தியது தி.மு.க. கடந்த சில ஆண்டுகளாகவே துணைநிலை ஆளுநர்கள் மூலமாக, ஆபத்து வந்தபோதும் இந்த மாநிலத்துக்கா கப் போராடிய இயக்கம் தி.மு.க.

கழக அரசின் காலத்தை வெல்லும் சாதனைகள்!

புதுச்சேரியில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்தபோதெல்லாம், புதிய புதிய திட்டங்களை இந்த மாநிலத்துக்கு நிறைவேற்றி இருக்கோம். சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற தலைவர் கலைஞரின் வாக்குப்படி, புதுச்சேரியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு இருக்கிறோம். தாலிக்கு தங்கம் திட்டம், சத் துணவில் முட்டை திட்டம், இதோ, உங்கள் கண்ணெதிரே சிறப்பாகச் செயல்பட்டு வரும் லாஸ்பேட்டை உழவர்சந்தை போன்றவை, கழக அரசின் காலத்தை வெல்லும் சாதனை கள். இதை எல்லாம் மனதில் வைத்து, நீங்க கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தட்டாஞ்சாவடி வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள் எதிர்கொண்டிருக் கும் இந்த இடைத்தேர்தல், இயற்கையாக நடக்கும் தேர்தல் கிடையாது. இது, உங்கள் மேல் திணிக்கப்பட்ட தேர்தல்!

முதலமைச்சர் ரங்கசாமி அவர்கள், கடந்த பொதுத்தேர்தலில் இரண்டு தொகுதி களில் நின்றார். வெற்றியும் பெற்றார். சட்டப் படி, ஒரு தொகுதியில் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்ற நிலையில், தட் டாஞ்சாவடி தொகுதியைக் கைவிட்டுவிட் டார். அதாவது, அவரை நம்பி வாக்களித்த உங்களைக் கைகழுவி விட்டார். அதனால், இந்த முறை நீங்களும் அவரை கைவிட்டு விடுங்கள். இந்த இடைத்தேர்தலில் என். ஆர் காங்கிரஸ் - பா.ஜ.க. கூட்டணி வேட்பா ளராக ஒருவரை முதல்வர் ரங்கசாமி நிறுத் தியிருக்கிறார். அவர் யார் என என்னைவிட உங்களுக்கே நன்றாகத் தெரியும்.

ஊழல் சாம்ராஜ்ஜியம் - சாராய சாம்ராஜ்ஜியம்!

கடந்த தேர்தலில், அந்த நபர் போட்டியிட நீதிமன்றம் ஏன் தடை விதித்தது என்றும் உங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட ஒரு வரைத்தான் முதல்வர் ரங்கசாமி வேட்பா ளராக நிறுத்தியிருக்கிறார். மறுபுறம், காங் கிரஸ் கட்சியும் அவர்கள் பங்குக்கு ஒரு வேட்பாளரை நிறுத்தியிருக்கிறார்கள். என். ஆர். காங்கிரஸ் வேட்பாளர் ஊழல் சாம்ராஜ் ஜியத்துக்கு சொந்தக்காரர் என்றால், இந்த காங்கிரஸ் வேட்பாளர் சாராய சாம்ராஜ்ஜி யத்திற்கு சொந்தக்காரராக இருக்கிறார் எனப் புதுவையில் எல்லோருக்குமே தெரிந் துள்ளது.

ஆனால், தி.மு.கழக வேட்பாளர் அரு மைச் சகோதரர் சேது செல்வம், எளிய, நேர் மையான பின்புலம் கொண்டவர். அடித் தட்டு உழைக்கும் வர்க்கத்தில் பிறந்த, பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பிரதிநிதிதான் நமது கழக வேட்பாளர் திரு. சேது செல்வம் அவர்கள். தொழிலாளர்களுக்காகப் போரா டிச் சிறை சென்றிருக்கிறார். அவரை நீங்கள் எப்போது வேண்டுமானாலும் சந்திக்கலாம். நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வரக்கூ டிய ஒருவரை வேட்பாளராக நிறுத்தியிருக்கி றோம்.

முதல்வர் ரங்கசாமி செய்த நன்மைகள் என்ன?

சேது செல்வம் அவர்களை நீங்கள் தேர்ந் தெடுத்தால் உங்களுக்காக உண்மையாக உழைப்பார் என உறுதியளிக்கிறேன். கடந்த காலங்களில், இந்த தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர் ரங் கசாமி அவர்கள் உங்களுக்காக செய்த நன் மைகள் என எதுவுமே இல்லை. அதைவிட கொடுமை இந்த தொகுதிக்கு ஒரு MLA அலு வலகம் கூட இல்லை. இது அவமானம் இல் லையா? நீங்கள் நமது சேது செல்வத்துக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றிபெறச் செய்தால், உங்களின் நீண்ட கால கோரிக்கையான இலவச வீட்டு மனைப்பட்டா கிடைக்க, உரிய நடவடிக்கை களைச் செய்வார். தட்டாஞ்சாவடியில் இருக் கும் தொழிற்பேட்டையில் புதிய தொழிற்சா லைகள் அமையப் பாடுபடுவார். இந்த தொகுதியில் நிலவும் மின்வெட்டுப் பிரச்சி னைக்கும் தீர்வு காண்பார்.

தேர்தல் சீசனில் மட்டும் வந்து, பத்து நாள் திருவிழா மாதிரி தலையைக் காட்டி விட்டுப் போகிறவர் அல்ல நம் வேட்பாளர்! "இந்த இடைத்தேர்தலில் தட்டாஞ்சாவடித் தொகுதியில் தி.மு.க. வென்று ஆட்சியா மாறப் போகிறது?" எனச் சிலர் கேட்கிறார் கள். அவர்களுக்கு நான் சொல்வது, ஆட்சி மாற்றம் நடந்தாலும், நடக்காவிட்டாலும் தொகுதியின் காட்சி மாற்றம் நடக்கும்.

அடுக்கடுக்கான படுகொலைகள்!

என்.ஆர்.காங்கிரஸ் - பா.ஜ.க., கூட்டணி ஆட்சியில் புதுச்சேரி, கொலைச்சேரியா மாறிவிட்டது. ஒரு வாரத்துக்கு சர்வசாதார ணமா நான்கு கொலையாவது நடக்கிறது. பட்டப்பகலில் ஒரு கொலை, நண்பகலில் ஒரு கொலை, மாலை ஒரு கொலை, நள்ளி ரவிலும் கொலை என அடுக்கடுக்கான படு கொலைகள் நடக்கிறது என நாளிதழ், டி. வி.யில் எல்லாம் பார்த்தேன். முதல்வர் ரங் கசாமி என்னதான் செய்துகொண்டு இருக் கிறார்? உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் என்ன செய்துகொண்டு இருக்கிறார்? குற்ற வாளிகள் மேல் கடும் நடவடிக்கை எடுக்கப் படும் எனச் சொல்லக் கூட வாய் திறக்காத ஆட்சிதான் இப்போது இங்கே நடக்கிறது. டபுள் இஞ்சின் சர்க்கார் இருந்தால் நல்லாட்சி நடக்கும் எனச் சொன்னார்கள். ஒரு இஞ்சி னும் இங்கே வேலை செய்வது மாதிரி தெரி யவில்லையே. சட்டம் ஒழுங்குச் சீரழிவும், நிர்வாகச் சீர்குலைவும் புதுச்சேரியை வாட்டி வதைத்துக்கொண்டு இருக்கிறது. இதை யெல்லாம் தட்டிக் கேட்க நமது சேது செல் வம் போன்ற ஒரு MLA வெற்றி பெற வேண் டும்! அவர் சட்டமன்றம் போனால் எதிர்க்கட்சியின் குரலுக்கு வலு சேர்ப்பார். அதனால்தான் சொன்னேன், ஆட்சி மாறி னாலும், மாறாவிட்டாலும் காட்சி மாறும்!

மாநில அந்தஸ்து அஸ்திரம்!

தனக்குப் பிரச்சினை வரும்போது மட் டும்தான், மாநில அந்தஸ்து அஸ்திரத்தை முதலமைச்சர் ரங்கசாமி கையில் எடுப்பார். சட்டமன்றத்தில் தீர்மானம் போட தெரிந்த ரங்கசாமி அவர்களே! அதிகாரிகள் தடுக்கி றார்கள் எனக் கூப்பாடு போடும் ரங்கசாமி அவர்களே! புதுவைக்கு மாநில அந்தஸ்து வேண்டுமென, சட்டமன்ற உறுப்பினர் களை டெல்லிக்கு அழைத்துக் கொண்டு போய், போராடலாமே? ஏன் செய்ய மாட் டேன் என்கிறீர்கள்? உங்கள் கூட்டணிக் கட்சியிடம்தானே ஒன்றிய அரசு இருக்கி றது? கடந்த தேர்தலிலேயே புதுவைக்கு மாநிலத் தகுதி பெற்றுத் தருவேன் எனச் சொல்லித்தானே ஆட்சிக்கு வந்தீர்கள்? நம்பி வாக்களித்த மக்களுக்கு என்.ஆர். காங்கிரசும், பா.ஜ.க.,வும் செய்ததெல்லாம் துரோகம் மட்டும்தான்!

இன்னொரு துரோகமும் களத்தில் நிற்கி றது. கடந்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதுகில் குத்திய காங்கிரஸ் கட்சி இங்கு களம் காண்கிறது. கடந்த சட்டமன் றத் தேர்தலில், ஐந்து தொகுதிகளில் கழக வேட்பாளர்களை எதிர்த்து, கூட்டணியில் இருந்துகொண்டே வேட்பாளர்களை நிறுத் தியது காங்கிரஸ் கட்சி. ஆனாலும், தி.மு.க. துரோகத்தை வென்றெடுத்தது. காலாப்பட்டு, ராஜ்பவன் தொகுதிகளில் கழக வேட்பாளர் கள் வெற்றி பெற்றனர். துரோகிகள் படு தோல்வி அடைந்தனர். அதே தோல்வியை இந்த தட்டாஞ்சாவடி தொகுதியிலும் காங்கி ரஸ் கட்சிக்குப் பரிசளிக்க வேண்டும். காங் கிரஸ் கட்சிக்கு டெப்பாசிட் கூட கிடைக்கக் கூடாது. புதுச்சேரியைப் பொறுத்தவரை காங்கிரஸ் கட்சி முடிந்துபோன அத்தியா யம். நமக்கு எதிராக நிற்கும் இந்த இரண்டு வேட்பாளர்களுக்கும் இந்த இடைத்தேர்தல் மூலம் பாடம் புகட்ட வேண்டும்.

சட்டமன்றத்தில் உங்கள் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்றால், நமது மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட் பாளர் சேது செல்வம் அவர்களுக்கு, உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து, அவரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என மீண் டும் உங்களை அன்போடு கேட்டுக் கொள் கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் முன்னிலை! சத்திய சாய்நாதன் மேற்பார்வையில்

மதுராந்தகத்தில் மேயர் பிரியா ராஜன் - தமிழன் பிரசன்னா - ஈரோடு இறைவன் - வே.மதிமாறன் - சைதை சாதிக் தொடர் பிரச்சாரம்!

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ, தலைமையில் வாக்குச் சேகரிப்பு!

மதுராந்தகம், அக்.4-

மதுராந்தகம் சட்டமன் றத் தொகுதி இடைத்தேர்த லில் மதச்சார்பற்ற முற் போக்குக் கூட்டணியின் வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, மது ராந்தகம் வடக்கு ஒன்றியத் தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப் பட்டுள்ள வையாவூர், சூரை, குன்னங்குளத்தூர், புதுப்பட்டு,அண்டவாக்கம் , நல்லூர், வீராலூர், பெரிய வெண்மணி ஆகிய ஊராட் சிகளுக்கு உட்பட்ட 5 பாகங்களில், 04.10.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 5.00மணி வரை, சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ. தலைமை யில் வாக்குச் சேகரிப்பு பிரச் சாரம் நடைபெற உள்ளது.

காலை 10.00 மணிக்கு சூரை ஊராட்சி பாகம் எண் 36ல் எழுத்தாளர் வே. மதிமாறன், இளம் பேச்சா ளர்கள் ராஜராஜேஸ்வரி, ஜோதி, யாசர், ஆகியோரும் பிரச்சாரம் மேற்கொள்கின் றனர்

தொடர்ந்து, காலை 11.00 மணிக்கு குன்னங்கு ளத்தூர் பாகம் எண் 9ல் சைதை சாதிக் வனிதா கிருத் திகா அழகிரி கருணாநிதி ஆகியோரும், காலை 12 மணிக்கு வையாவூர் பாகம் எண் 35ல் வே.மதிமா றன்,இளம் பேச்சாளர்கள் ராஜராஜேஸ்வரி, பவித்ரா சரண், ஆகியோரும்,

மதியத்திற்குப் பின்னர் பிற்பகல் 2.00 மணிக்கு புதுப்பட்டு பாகம் எண் 57ல் ஈரோடு இறைவன் இளம் பேச்சாளர்கள் வனிதா, எழில் துரை,ஜோதி ஆகி யோரும் பிரச்சாரம் மேற் கொள்கின்றனர்.

மாலை 4.00 மணிக்கு அண்டவாக்கம் பாகம் எண் 38ல் ஈரோடு இறைவன், சைதை சாதிக், இளம் பேச் சாளர் வனிதா, பவித்ரா, ஷரன், ஆகியோரும் வாக் குச் சேகரிப்பு பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்.

இந்த வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சிகளில் அந்தந்த பாகங்களுக்கு உட்பட்ட உள்ளூர் நிர்வாகிகள், கூட் டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், வாக்கா ளர்களை பெருமளவில் பங் கேற்கச் செய்வதற்கான பணிகளை மேற்கொள்ளு மாறு சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலா ளர் பி.கே.சேகர்பாபு எம். எல்.ஏ. கேட்டுக்கொண் டுள்ளார்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட வேடந்தாங்கல், கரிக்கிலி, வெள்ளபுத்தூர் ஆகிய ஊராட்சிகளில் வீடு வீடாகச் சென்று. உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி. தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணாநகர் தெற்கு பகுதி செயலாளர் நா. ராமலிங்கம் எம்.சி, அண்ணாநகர் வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், வட்டச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் வாக்கு சேகரித்தனர்.

கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி (KMBF) நிறுவனம்

சட்டரீதியாகச் செயல்படுவதை தமிழ்நாடு அரசு உறுதி செய்திட வேண்டும்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

சென்னை, அக்.4-

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின், தமிழ்நாடு மாநில செயற்குழு சார்பில் இது குறித்து, விடப்பட் டுள்ள ஊடகங்களுக்கான செய்தி வருமாறு:-

தஞ்சை மாவட்டம், கும் பகோணம் மாநகரை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் கும்பகோணம் பரஸ் பர சகாய நிதி (KMBF) நிறுவ னம் கடந்த 1903 முதல் இயங்கி வரும் 123 ஆண்டு கால பாரம்பரியம் கொண்ட தனியார் நிதி நிறு வனம் ஆகும்.

நாடு முழுவதும் 156 கிளைகள் உள்ளன. 12 லட் சத்திற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் இந்நிறு வனத்தில் பங்குகளை வைத் துள்ளனர்.

1,500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இந்நிறுவனத் தில் பணியாற்றுகின்றனர்.

இயக்குநர் குழுத் தேர்த லில் தற்போதைய நிர்வா கம் மீண்டும் வெற்றி பெற் றதாக தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலை யில், சில சக்திகள் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை உருவாக்குவது கவலைய ளிக்கிறது.

ஜனநாயக முறையில் புதிதாக தேர்ந்தெடுக்கப் பட்ட அந்நிதி நிறுவனத்தின் தலைவர்,செயலாளர் மற் றும் இயக்குநர்கள் சட்டப் பூர்வமாக செயல்படுவது உறுதிசெய்யப்பட வேண்டும்.

அரசியல் வேறுபாடுக ளுக்கு அப்பாற்பட்டு, புதிய நிர்வாகிகளின் பணி தொடர்ந்து நடைபெற தமிழ்நாடு அரசு நடவ டிக்கை எடுக்க வேண்டும்.

தேர்வு செய்யப்பட் டுள்ள நிர்வாகிகள் மீது வழக்குகள் பதிந்து கைது செய்து அச்சுறுத்தும் நடவ டிக்கைகளில் காவல்துறை ஈடுபடக் கூடாது. அதிகார அத்துமீறல்களுக்கு சிறிதும் அனுமதி அளிக்கக்கூடாது.

கும்பகோணம் மாநக ரில் செயல்பட்டு வரும் மத் திய அலுவலகம் மற்றும் நிறு வனத்தின் ஊழியர்களின் பாதுகாப்பு உறுதி படுத்தப் பட வேண்டும்.நிறு வனத் தின் நன்மதிப்பு பாதுகாக் கப்பட வேண்டும்.

பங்குதாரர்கள் மற்றும் உறுப்பினர்களின் முதலீடு கள், உரிமைகள், நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நிர்வாக முடிவுகள் அனைத் தும் சட்டம் மற்றும் நிறு வன விதிகளுக்கு உட் பட்டே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை உறுதி செய்திட முன்வர வேண் டும் என தமிழ்நாடு அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி யின் தமழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்து கிறது.

இவ்வாறு இந்தியக் கம் யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டி யன் தெரிவித்துள்ளார்.



மதுராந்தகம் இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் தீட்டாளம் ஊராட்சியில் வாக்குச்சாவடி எண்.46க்கு உட்பட்ட அனைத்து தெருக்களில் தலைமை செயற்குழு உறுப்பினர் முன்னாள் மாவட்ட செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றிய செயலாளர் மு.மணிபாலன், பேரூர் செயலாளர் இரா.அறிவழகன், வேம்பேடு சேகர், நெச்சிகுப்பம் ரவி, கஜேந்திரன், கே.சி.ராஜா, மதி, தயாளன், வாக்குச்சாவடி பாக எண்.46 நிர்வாகிகள் ஜெகத்ரட்சகன், பி.கண்ணன், சி.விஸ்வநாதன், செந்தில்குமார், வெங்கடேசன், பாண்டியன், மகேஷ், ரேணுகா, நதியா, ரேவதி, சங்கரி, அஞ்சலை, ரமேஷ், சக்திவேல், கும்மிடிப்பூண்டி மேற்கு, கும்மிடிப்பூண்டி பேரூர் மாவட்ட ஒன்றிய அணிகளின் பொறுப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.